[டாக்டர் சி. விஜய பாஸ்கர்] [2017 ஜூன் 21

தேவையில்லை என்று மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாக மூன்று உறுப்பினர்களுக்கும் தெரிவித்துக்கொண்டு அமர்கின்றேன். (மேசையைத் தட்டும் ஒலி)

2. தகவல் கோரல்—*தொடர்ச்சி*

(ஆ) சென்னை காசிமேடு பகுதியில் மீன் விற்பனை இடம் மாற்றப்பட்டுள்ளதால் ஏற்பட்டுள்ள பாதிப்பு

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு உறுப்பினர் திரு. கே.பி.பி. சாமி, என்னவென்று சொல்லுங்கள். சுருக்கமாகச் சொல்ல வேண்டும். நான் தகவல் கோரல் என்ற முறையில்தான் உங்களைப் பேச அழைத்திருக்கிறேன். ஒரு நிமிடத்தில் பேசி முடியுங்கள்.*

***திரு. கே.பி.பி. சாமி:** *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மீன் பிடித் தடைக் காலம் 45 நாட்களிலிருந்து 60 நாட்களாக நீட்டிக்கப்பட்ட நிலையில், தடைக் காலம் முடிந்து, கடந்த ஜூன் மாதம் 15 ஆம் தேதியிலிருந்து தமிழக மீனவர்கள் மீன்பிடிக்கச் சென்றுகொண்டிருக்கின்றார்கள். இதில் குறிப்பாக, சென்னை மாநகரில் இருக்கக்கூடிய காசிமேடு மீன்பிடித் துறைமுகத்தில் மீன் பிடித்து வருகின்ற மீனவர்கள், தாங்கள் பிடித்து வந்த மீன்களை ஏற்கெனவே விற்பனை செய்து வந்த இடத்தில், இப்பொழுது விற்பனை செய்யக் கூடாது என்றும், புதிய இடத்தில்தான் விற்பனை செய்ய வேண்டும் என்றும் மீன் வளத் துறை அதிகாரிகள் அறிவுறுத்துகின்றனர். இந்தச் சூழ்நிலையில், மீனவத் தொழிலாளர்கள், மீனவர்கள், மீன் விற்பனை செய்கின்ற பெண்கள் உட்பட அனைவரையும் பழைய இடத்திலேயே மீன் விற்பனை செய்ய அனுமதிக்க வேண்டும் என்ற கோரிக்கையை வைத்திருக்கிறார்கள். அதோடு, பழைய இடத்திலேயே இன்னும் சிலர் மீன்களை விற்பனை செய்து கொண்டிருக்கிறார்கள். எனவே, இதுபோன்று இரண்டு இடங்களிலும் பிரித்து மீன்களை விற்பனை செய்கின்ற காரணத்தினால், மீன்களுக்கு உரிய விலை கிடைக்காமல் மீனவர்கள் மிகுந்த வேதனைக்குள்ளாகியிருக்கின்றார்கள்.*

முற்பகல் 11–45

அவையில் உள்ள அனைவருக்கும் தெரியும். ஏற்கெனவே, ஜனவரி 28 ஆம் தேதி, நம்முடைய காமராஜர் துறைமுகத்திலிருந்து

2017 ஜூன் 21] [திரு. கே.பி.பி. சாமி]

வெளியே சென்ற கப்பலும், உள்ளே வந்த கப்பலும் மோதிக் கொண்டதில், கடலிலே கச்சா எண்ணெய் கலந்து, 3 மாத காலமாகத் தொடர்ந்து மீனவர்கள் வாழ்வுரிமையை இழந்து, வாடிக் கொண்டிருக்கின்ற வேளையிலே, இந்த மீன்பிடித் தடைக் காலமும் 45 நாட்களிலிருந்து 60 நாட்களாக நீட்டித்த நிலையில், மீன் விற்பனை செய்வதிலே இருக்கக்கூடிய பிரச்சினைகளை சுமுகமான முறையிலே தீர்த்து வைத்திட, துறையினுடைய அமைச்சரும், துறையினுடைய அதிகாரிகளும் உடனடியாக இதில் தலையிட்டு, பேசித் தீர்த்து ஒரு நல்ல முடிவை எட்டி, மீனவர்களுடைய வாழ்க்கைக்கு வழி வகுத்திட வேண்டுமென்று உங்கள் வாயிலாகக் கேட்டு அமர்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு மீன் வளம், நிதி மற்றும் பணியாளர் மற்றும் நிருவாகச் சீர்திருத்தத் துறை அமைச்சர் அவர்கள்.

***மாண்புமிகு திரு. டி. ஜெயக்குமார்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் திரு. கே.பி.பி. சாமி அவர்கள் இன்று காலையில்தான் தங்களிடத்திலே இதுகுறித்த கவன ஈர்ப்பு அறிவிப்பினைக் கொடுத்திருக்கிறார்கள். எனவே, மாண்புமிகு உறுப்பினர் திரு. கே.பி.பி. சாமி அவர்களுக்கு, நம்முடைய மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் எந்த அளவிற்குக் கரிசனம் காட்டியிருக்கிறார் என்பதை உணர்ந்து. . . (சிரிப்பு)

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு அமைச்சர், நீங்களும் அதே அளவுக்குக் கரிசனமாக அவருக்குப் பதில் சொல்லுங்கள். (சிரிப்பு)

மாண்புமிகு திரு. டி. ஜெயக்குமார்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் திரு. சாமி அவர்கள்மீது மிகுந்த அன்பு வைத்திருக்கின்றார்கள். எனவே, அதற்கேற்ற வகையிலே பேரவையின் நடவடிக்கைகள் இருக்கும் என்ற அந்த நம்பிக்கையோடு நான் பதிலளிக்க விரும்புகிறேன். இந்த விவகாரம் உயர் நீதிமன்றத்திலே இருக்கின்ற காரணத்தினாலே, நான் அந்த நீதிமன்ற விஷயத்திற்குள் போக விரும்பவில்லை. இருந்தாலும், நம்முடைய மாண்புமிகு உறுப்பினர் அவர்களின் கேள்விக்கு பதில் அளிக்கின்ற வகையில் ஒரு சில விவரங்களைத் தெரிவிக்க விரும்புகிறேன். நம்முடைய மீன்பிடித் துறைமுகத்தை பொறுத்தவரையில், ஆசியாவிலேயே

[திரு. டி. ஜெயக்குமார்] [2017 ஜூன் 21

ஒரு பெரிய மீன்பிடித் துறைமுகமாக, நவீன மீன்பிடித் துறைமுகமாக உருவாக்க வேண்டும்; அப்படி இருக்கவேண்டும் என்ற முனைப்போடுதான், மாண்புமிகு இதய தெய்வம் டாக்டர் புரட்சித் தலைவி அம்மா அவர்கள் 100 கோடி ரூபாய் அளவிற்கு இந்தத் துறைமுகத்திற்கு நிதியை ஒதுக்கீடு செய்ய உத்தரவிட்டு, பணிகள் நடைபெற்று வருகின்றன.

அதிலே 12 கோடி ரூபாய் அளவிற்கான ஏலக் கூடம், அதாவது Auction Hall, நம்முடைய மாண்புமிகு இதய தெய்வம் டாக்டர் புரட்சித் தலைவி அம்மா அவர்களின் திருக்கரங்களால் திறந்து வைக்கப்பட்டது. அப்படி திறந்து வைக்கப்பட்ட அந்த ஏலக் கூடத்தில் இப்போது மீன்களை விற்பதுதான் நியாயம். ஏனென்று சொன்னால், தற்போது மீன் விற்கின்ற இடத்தில் எந்தவித வசதியும் இல்லை. இந்தச் சூழ்நிலையில், புதிய இடத்தில் cold storage, CCTV camera, விளக்கு வசதி உட்பட எல்லா வசதிகளும் உள்ளன. இப்போது இருக்கின்ற ஏலம் விடும் கூடத்தைவிட, புதிதாகக் கட்டப்பட்டு இருக்கின்ற Auction Hall 2½ மடங்கு அளவிற்கு விஸ்தீரணமான இடம். பழைய இடத்திலிருந்து சுமார் 50 மீட்டர் தொலைவில்தான் இருக்கிறது. ஏதோ புதிய மீன் விற்பனைக் கூடம் பழைய இடத்திலிருந்து 1 கி.மீ., 2 கி.மீ., தள்ளி அமைக்கப்பட்டுவிட்டது என்று சொன்னால், அதிலே ஒரு நியாயம் இருக்கிறது. இப்போதிருக்கின்ற இடத்திலிருந்து 50 மீட்டர் அளவிற்கு, எல்லா வசதிகளுடன் இருக்கிறது. 2½ மடங்கு கூடுதலான இடம், cold storage வசதி, CCTV camera, பாதுகாப்பு வசதி என எல்லா வசதிகளும் இருக்கின்றன. எந்தவித அச்சமும் இல்லை. எனவே அங்கே மீன் விற்பதற்கு ஏன் இந்தத் தயக்கம் என்பதே தெரியவில்லை. சிலரின் சுயநலத்திற்காக நிச்சயம் அரசு பணியாது. பழைய மீன் விற்பனை இடத்தினை European Economic Community–ஐ (EEC) சார்ந்தவர்களெல்லாம் வந்து பார்த்துவிட்டு, மிகவும் வருத்தப்பட்டுச் சென்றார்கள். ஒரு மீன்பிடித் துறைமுகம் என்பது நல்லதொரு சுகாதாரமான சூழ்நிலையில் இருக்க வேண்டும். அப்போதுதான் உங்கள் மீன்களையெல்லாம் நாங்கள் வாங்குவோம் என்று அந்தக் கருத்தைச் சொல்லியிருக்கின்றார்கள். எனவே, மீனவர்களால் பிடிக்கப்படுகின்ற மீன்களுக்கு நல்ல விலை கிடைக்க வேண்டும் என்ற அடிப்படையில் நடவடிக்கைகள் எடுக்கப்படுகின்றன. விலை கிடைப்பதோடு மட்டுமல்ல; மீனவர்களுடைய வாழ்வாதாரம் மேம்பாடு அடைய வேண்டும் என்ற அந்த இரண்டு எண்ணத்தோடுதான், இந்த

2017 ஜூன் 21] [திரு. டி. ஜெயக்குமார்]

இலட்சியத்தோடுதான் இந்த ஏற்பாடு செய்யப்பட்டிருக்கிறது. இதிலே யாருக்கும் எந்தவித பாதிப்பும் நிச்சயமாக வராது என்கிற அந்தக் கருத்தைத் தெரிவித்து, நம்முடைய பத்திரிகைத் துறையைச் சார்ந்த நண்பர்களைக்கூட நான் கேட்டுக்கொள்கிறேன். இப்போது Auction Hall இருக்கிற அந்த இடத்தை நீங்கள்கூட போய்ப் பாருங்கள். மாண்புமிகு அம்மா அவர்கள் திறந்து வைத்திருக்கின்ற அந்த Auction Hall–ல் எந்த அளவிற்கு, CCTV camera, cold storage போன்ற வசதிகள் இருக்கின்றன என்பதைப் பாருங்கள். அதேபோன்று, தற்போது ஏலம் விடுகின்ற இடத்தையும் பாருங்கள்; ஒப்பிட்டுப் பாருங்கள். அதன்பிறகு நீங்கள் நல்ல கருத்தைக் கூறுங்கள். அதற்கு ஏற்றவகையில் அரசு முடிவு செய்யும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன். (குறுக்கீடு)

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *திரு. சாமி, அவ்வளவுதான்; நீங்கள் உட்காருங்கள்.*

4. மானியக் கோரிக்கைகள், 2017–2018, விவாதமும் வாக்கெடுப்பும்—*தொடர்ச்சி*

(அ) கோரிக்கை எண் 34–நகராட்சி நிருவாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறை

(ஆ) கோரிக்கை எண் 42–ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சித் துறை

(இ கோரிக்கை எண் 53–சிறப்புத் திட்ட செயலாக்கத் துறை

} தொடர்ச்சி

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *2017–2018 ஆம் ஆண்டிற்கான மானியக் கோரிக்கைகள்மீது விவாதமும் வாக்கெடுப்பும். 20–6–2017 அன்று மாண்புமிகு நகராட்சி நிருவாகம் மற்றும் ஊரக வளர்ச்சி, சிறப்புத் திட்டங்கள் செயலாக்கத் துறை அமைச்சர் அவர்களால் முன்மொழியப்பெற்ற மானியக் கோரிக்கைகள் மற்றும் அவற்றின்மீது முன்மொழியப்பெற்ற வெட்டுத் தீர்மானங்கள் ஆகியவற்றின்மீதான விவாதத்தின் தொடர்ச்சி. மாண்புமிகு உறுப்பினர் திரு. கே.கே.எஸ்.எஸ்.ஆர். இராமச்சந்திரன் அவர்கள்.*